# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## இலவசக் கல்விக்கான உரிமை

**இலங்கையிலுள்ள சகல பிள்ளைகளுக்கும் இலவசக் கல்வியை வழங்குவதற்கு வழிசமைப்பதற்கானதோர் சட்டமூலம்**

---

*குருநாகல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அகிலவிராஜ் காரியவசம் அவர்களால் 2011, பெப்புருவரி மாதம் 08 ஆம் திகதியன்று  சமர்ப்பிக்கப்பட்டது*

*(2011, சனவரி மாதம் 17 ஆம்  திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

**[ 69 ஆம் சட்டமூலம் ]**


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

2-PL 005483-350 (2011/02)

## இலங்கையிலுள்ள சகல பிள்ளைகளுக்கும் இலவசக் கல்வியை வழங்குவதற்கு வழிசமைப்பதற்கானதோர் சட்டம்

*முன்னுரை.*

ஆகக் குறைந்தது இரண்டாம் நிலைக் கல்வி வரையாவது, இலங்கையிலுள்ள சகல பிள்ளைகளுக்கும் இலவசக் கல்வி வழங்கப்படுவதை உறுதி செய்துகொள்ள வேண்டிய அவசியம் எழுந்துள்ளது என்பதனால்,

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக.

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலவசக் கல்விக்கான உரிமைச் சட்டம் என அழைக்கப்படலாம்.

### இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான உரிமை

*இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான பிள்ளை யொன்றின் உரிமை.*

**2.** (1) ஒவ்வொரு பிள்ளையும் ஐந்து வயது முதல், விபரிக்கப்பட்டவாறு விதிக்கப்பட்ட பாடசாலையொன்றில் தனது இலவசக் கல்வியைப் பூரணப்படுத்துவதற்கு உரிமையுடையவராயிருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உபபிரிவின் பொருட்டு, ஏதாவது கட்டணம் அல்லது அறவீடு அல்லது செலவினத்தை, அவ்விதக் கல்வியைப் பூரணப்படுத்துவதற்கு மற்றும் தொடர்வதற்கு சட்டத்தின்கீழ் தடுக்கப்பட்டிருந்தாலொழிய, எந்த ஒரு பிள்ளையும் செலுத்துவதற்கு கடப்பாடுடையதல்ல.

*வேறொரு பாடசாலைக்கு இடம் மாற்றுவதற்கான உரிமை.*

**3.** (1) ஏதாவது பாடசாலையொன்றில் கல்வியைப் பூரணப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் இல்லையெனில், பொருத்தமான அதிகாரசபையினால் வழங்கப்பட்ட பணிப்புரைகள் அல்லது அவ்வித ஒழுங்கு விதிகளின் பிரகாரம் வேறு ஏதாவது விதிக்கப்பட்ட பாடசாலைக்கு இடமாற்றமொன்றை நாடுவதற்கான உரிமை பிள்ளைக்கு இருத்தல் வேண்டும்.

(2) ஒரு மாகாணத்தினுள்ளோ அல்லது அதற்கு வெளியிலோ உள்ள வேறொரு பாடசாலைக்குச் செல்லும்படி பிள்ளையொன்று, ஏதாவது காரணிகளின் நிமித்தம் தேவைப்படுத்தப்பட்டால்,

2-PL 005483-145 (2011/02)

பொருத்தமான அதிகாரசபையினால் வழங்கப்பட்ட பணிப்புரைகள் அல்லது அவ்வித ஒழுங்கு விதிகளின் பிரகாரம் வேறு ஏதாவது விதிக்கப்பட்ட பாடசாலைக்கு இடமாற்றமொன்றை நாடுவதற்கான உரிமை அவ்வித பிள்ளைக்கு இருத்தல் வேண்டும்.

## பொருத்தமான அதிகாரசபை மற்றும் பெற்றோர்களது கடமைகள்

*பொருத்தமான அதிகார சபையின் கடமைகள்.*

**4.** 1993, 8 ஆம் இலக்க, பாடசாலை அபிவிருத்திச் சபைகள் ஏற்பாடுகள், 1998, 50 ஆம் இலக்க, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டம், 2005, 16 ஆம் இலக்க, சுனாமி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் II ஆம் பகுதி, 2005, 34 ஆம் இலக்க, வீட்டு வன்முறைகள் தடுப்புச் சட்டம் ஆகியன இதுவரை, 1991, யூலை 12இல் இலங்கை கையொப்பமிட்ட சிறுவர்கள் மற்றும் சிறுவர் உரிமைகள் தொடர்பான சமவாயம் குறிப்பாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையுடன் தொடர்புடையதாக இருப்பதால் பொருத்தமான அதிகாரசபை முழுமையாக வலுச் சேர்க்கக்கூடியதாய் இருத்தல் வேண்டும் :-

(அ) விதிக்கப்பட்ட பாடசாலையைத் தவிர வேறொரு பாடசாலைக்கு பிள்ளையானது தனது பெற்றோர் அல்லது பாதுகாவலரினால், இவர்களுள் யாருக்குப் பொருத்தமோ அவர்களினால், அனுமதிக்கப்படுமாயின், அப்பிள்ளை, அதனது பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் இவர்களுள் யாருக்குப் பொருந்துமோ அவர்களினால், அவ்வித வேறொரு பாடசாலையில் பிள்ளை கல்வி கற்பதற்காக ஏற்பட்ட செலவினத்தை திருப்பிக் கொடுக்கும்படி கோருவதற்கான அருகதையற்றவர்களாக இருத்தல் வேண்டும் என்ற அடிப்படையில், ஒவ்வொரு பிள்ளைக்கும் 5 வயதிலிருந்து (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு தனது கல்வியைப் பூரணப்படுத்தும் வரை விதிக்கப்பட்ட பாடசாலையொன்றில் இலவசக் கல்வியை வழங்கவும் ;

(ஆ) 5 (1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் ஏதாவது பொதுப் பரீட்சையில் வெற்றிகரமாக தகமை பெற்றுள்ளார் என்ற நிலையின் பேரில் ஒவ்வொரு பிள்ளைக்கும் ஐந்து வயதிலிருந்து பதின்மூன்றாம் வகுப்பு வரை இலவசக் கல்வியை வழங்குவது ;

(இ) ஒவ்வொரு பிள்ளையினதும் அனுமதி, வருகைதரல் ஆகியவற்றுடன் கல்வியைப் பூரணப்படுத்துவதை உறுதி செய்வது ;

(ஈ) 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைவதற்கு அரச பாடசாலையொன்றுள்ளது என்பதை உறுதி செய்தல் ;

(உ) கற்றல் உபகரணம், கற்பிப்பதற்கான பணியாட்டொகுதியினர், பாடசாலைக் கட்டிடங்கள் உள்ளடங்கலாக உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் ;

(ஊ) ஆசிரியர்களுக்காக பயிற்சி வசதிகளை வழங்குதல்.

பொது வகுப்பேற்ற பரீட்சை.

**5.** (1) அடுத்த ஆண்டிற்கான கற்கையைத் தொடர்வதற்கு அவசியமான தகைமையையுடைய ஓர் ஏதாவது பொதுப் பரீட்சையை பரீட்சைகள் ஆணையாளர் நடத்துவதற்கு வர்த்தமானி மூலம் கட்டளையொன்றை அமைச்சர் பிறப்பிக்கலாம்.

(2) அங்கவீனத்தின் காரணமாக துன்பப்படும் ஓர் பிள்ளையும் இச்சட்டத்தின்கீழ் உருவாக்கப்படும் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் அமைச்சரினால் வழங்கப்படும் வழிமுறைகளுக்கேற்ப இலவசக் கல்வியைப் பயில்வதற்கான உரிமையையுடையதாய் இருத்தல் வேண்டும்.

நிதிப் பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ளல்.

**6.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதற்கான நிதியைப் பெற்றுக்கொள்வதற்கான பொறுப்புடையதாக பொருத்தமான அதிகாரசபைகள் இருத்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு சகல அதிகாரசபைகளும் தேவைப்படுகின்ற மொத்த மூலதனம் மற்றும் மீண்டுவருஞ் செலவினங்கள் தொடர்பான ஐந்து வருடங்களுக்கான மதிப்பீட்டு அறிக்கையை, நிதி அமைச்சின் உடன்பாட்டுடன், 2012 ஆம் ஆண்டு முதல் பாராளுமன்றத்தில் அமைச்சரினால் சமர்ப்பிக்கக் கூடியதாயிருத்தல் வேண்டும்.

(3) பாராளுமன்றத்திலோ அல்லது மாகாண சபையிலோ எதற்குப் பொருத்தமானதோ அதில் நிதி விடயத்திற்குப் பொறுப் பான அமைச்சர் வரவு செலவுத் திட்டமொன்றை சமர்ப்பிக்கும் பொழுது, மதிப்பீடுகளுடனான உடன்பாடு பற்றிய கூற்றொன்றை மேற்கொள்ளக்கூடியதாயிருத்தல் வேண்டும்.

(4) நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அவ்வப் போது இவ்வறிக்கையை திருத்தக்கூடியதாயிருத்தல் வேண்டும்.

(5) சனாதிபதி மாகாண நிறைவேற்றுச் சபைக்கு வழங்குவதற்கு அவசியமான ஏதாவது மேலதிக வளங்கள் தொடர்பாக ஆராய் வதற்காக நிதி ஆணைக்குழுவிடம் ஆற்றுப்படுத்தலொன்றை மேற்கொள்ளலாம், என்பதுடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு அத்தகைய நிதி குறிப்பிட்ட மாகாண நிறைவேற்றுச் சபை வழங்கலாம்.

(6) மேற்குறிப்பிட்ட உபபிரிவின்கீழ் குறிப்பிட்ட மாகாண நிறைவேற்றுச் சபைக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நிதி, மற்றும் அதனது ஏனைய வளங்கள் தொடர்பில் ஒவ்வொரு மாகாண நிறைவேற்றுச் சபைகளும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளக்கூடியதாய் இருத்தல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத் தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு நிதியை வழங்கு வதற்கு பொறுப்பாயிருத்தல் வேண்டும்.

*பெற்றோர் மற்றும் பாதுகாவலர் களது கடமைகள்.*

**7**. விதித்துரைக்கப்பட்ட பாடசாலையொன்றில் பாடசாலைக் கல்வியை தனது பிள்ளை அலலது கண்காணிப்புறு இளங்கணர், யாருக்குப் பொருத்தமானதோ, அவர் பெறும் வகையில் அனுமதித்தல் அல்லது அனுமதிக்கச் செய்தல் ஒவ்வொரு பெற்றோர் அல்லது பாதுகாவலரது கடமையாய் இருத்தல் வேண் டும்.

## பாடசாலை மற்றும் ஆசிரியர்களது பொறுப்புகள்

*எவ்விதக் கட்டணங்களும் அறவிடக் கூடாது.*

**8**. ஒரு பிள்ளையை பாடசாலைக்கு அனுமதிக்கும் பொழுது பாடசாலையோ அல்லது வேறு நபரோ ஏதாவது கட்டணங்களை அறவிடக் கூடாது.

**9.** (1) பாடசாலைச் செயற்பாடுகள், தேசிய தினம், சமய விழாக்கள், வெளிநாட்டு அரச பிரமுகர்களின் விஜயங்கள் ஆகியன தவிர்ந்த ஏனைய எவ்விதச் செயற்பாடுகளுக்காகவும் மாணவர்களை பயன்படுத்தக்கூடாது. அமைச்சரின் செயற்பாடுகள்.

(2) பரீட்சைகள் நடைபெறும் தினங்கள் உள்ளடங்கலாக அடுத்த வருடத்திற்கான பாடசாலைக் கலெண்டரை ஒற்றோபர் 31 ஆம் திகதிக்கு முன்னராக வர்த்தமானியில் அமைச்சரினால் பிரசுரிக்கப்பட வேண்டும்.

(3) 180 நாட்களுக்குக் குறையாத வகையில் கல்வியாண்டிற்கான ஆகக் குறைந்த வேலை நாட்களை குறிப்பிடக்கூடியவராக அமைச்சர் இருத்தல் வேண்டும்.

(4) பரீட்சைத் திகதிகள் நிர்ணயிக்கப்பட்டதன் பின்னர், இயற்கைப் பேரழிவுகள் போன்ற அவசர நிலைமைகளைத் தவிர வேறு காரணங்களுக்காக பாராளுமன்றத்தின் அனுமதியின்றி அவற்றை மாற்றக் கூடியவராக அமைச்சர் இருத்தல் ஆகாது.

(5) பரீட்சைகள் நடைபெறும் காலப்பகுதியுடன் முரண்படக் கூடிய விதத்தில், தேர்தல் ஆணையாளர் தேர்தலை நிர்ணயம் செய்யக்கூடாது.

**10.** (1) ஆசிரியர்களாக ஆட்சேர்க்கப்பட்டவர்கள் III ஆம் பிற்சேர்க்கை 4 ஆம் விடயத்தின் 9 ஆம் அட்டவணையில் பட்டிய லிடப்பட்ட கற்பித்தல் தகைமைகளைக் கொண்டவராயிருத்தல் வேண்டும். வேறு ஏதாவது தெரிவுகள்/ஆட்சேர்ப்புகள் ஆகியன III ஆம் பிற்சேர்க்கையின் 5 ஆம் விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு பரீட்சைகளை அடிப்படையாகக் கொண்டு அமைதல் வேண்டும். ஆசிரியர்கள்.

(2) அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கான பதவியுயர்வுத் திட்டங்கள் முழுமையாக திறமை, மூப்புரிமை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

ஆசிரியர்களது கடமைகள் மற்றும் மனக் குறைக்கான பரிகாரங்கள்.

**11.** (1) ஒவ்வொரு ஆசிரியரும் பின்வரும் கடமைகளை நிறைவேற்ற வேண்டும் :-

(அ) பாடசாலைக்கு சமுகமளிக்கும் பொழுது ஒழுங்கையும் நேரந்தவறாமையையும் பேணல் ;

(ஆ) 29 ஆம் பிரிவின் 2 ஆம் உபபிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பாடத்திட்டத்தை முறையாக நடத்தி பூரணப் படுத்தல் ;

(இ) முழுப் பாடத்திட்டத்தையும் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் பூரணப்படுத்தல் ;

(ஈ) ஒவ்வொரு பிள்ளையினதும் கற்கும் ஆற்றலை கணிப்பிட்டு அதற்கேற்ற வகையில் தேவையாயின் மேலதிக அறிவுறுத்தல்களை வழங்கல் ;

(உ) பெற்றோர், பாதுகாவலருடன் முறையாகக் கூட்டங்களை நடத்தி பிள்ளையின் வரவு, ஒழுங்கு, கற்கும் ஆற்றல், கற்றலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் பிள்ளை பற்றி பொருத்தமான ஏனைய தகவல்களை அறிவித்தல்; அத்துடன்

(ஊ) விதிக்கப்படக் கூடிய அவ்வித ஏனைய கடமைகளை நிறைவேற்றல்.

(2) (1) ஆம் உபபிரிவில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் தனது கடமைகளை நிறைவேற்றத் தவறிய ஓர் ஆசிரியர், தனக்கு ஏற்புடைய சேவை விதிகளின்கீழ் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு அருகதையுடையவராவார். எவ்வாறானாலும் ஓர் ஆசிரியருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னர் அவ்வித ஆசிரியரின் கருத்தை செவிமடுப்பதற்கு நியாய பூர்வமான வாய்ப்புகள் வழங்கப்படுதல் வேண்டும் ;

(2) ஏதாவது ஆசிரியரொருவரின் மனக்குறைகளுக்கு, எடுத்துரைக்கப்படவிருக்கின்ற அவ்வித முறைகளின் பிரகாரமும் பரிகாரம் காணப்படலாம்.

**12.** (1) இச்சட்டம் நடைமுறைக்கு வந்த திகதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதியினுள், ஒவ்வொரு பாடசாலையிலும் விதிக்கப் பட்டவாறு ஆசிரியர்-மாணவர் விகிதம் பேணப்பட்டுள்ளது என்பதை பொருத்தமான அதிகாரசபை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

*ஆசிரியர் மாணவர் விகிதம்.*

(2) (1) ஆம் உபபிரிவின்கீழ் மாணவர் -ஆசிரியர் விகிதத்தைப் பேணிக்கொள்வதை நோக்காகக் கொண்டு 13 ஆம் பிரிவில் குறிப் பிட்டவற்றைத் தவிர வேறு காரணங்களுக்காக, பாடசாலை யொன்றில் நியமிக்கப்பட்ட ஆசிரியரொருவர், வேறு பாடசாலை யொன்றிலோ, அலுவலகத்திலோ அல்லது கல்விசாராத வேறு நோக்கங்களுக்காகவோ பணிக்கமர்த்தப்படல் கூடாது.

(3) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதை நோக்காகக் கொண்டு ஆசிரியர் நியமனத்தில் முன்னுரிமை யளிக்கப்படலாம். மாகாணத்திலுள்ள சகல பாடசாலைகளிலும் பொருத்தமான விகிதம் பேணப்படும் வரை மாகாணத்திற்கு வெளியே எந்தவொரு ஆசிரியரும் நியமிக்கப்படக் கூடாது.

**13.** பத்தாண்டுகளுக்கொரு முறை நடைபெறும் சனத்தொகை புள்ளி விபரம் இடர் நிவாரணக் கடமைகள் அல்லது தேர்தல்கள் கடமைகள் ஆகியவற்றுடன் தொடர்புடையவற்றை தவிர்ந்த, கல்வி சாராத வேறு நோக்கங்களுக்காக எந்தவொரு ஆசிரியரையும் ஈடுபடுத்தக் கூடாது.

*கல்வி சாராத நோக்கங் களுக்காக ஆசிரியர்களை ஈடுபடுத்துவதை தடைசெய்தல்.*

### பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாத்தல்

**14.** (1) 1998, 50 ஆம் இலக்க, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்ட ஏற்பாடுகளுக்கு முழுமையான அர்த்தத்தை பொருத்தமான அதிகாரசபைகள் வழங்குவதாக இருக்க வேண் டும்.

*மனக்குறைக் கான பரிகாரம்.*

(2) முதலாம் உபபிரிவின்கீழ் முறைப்பாடு கிடைக்கப்பட்டதன் பின்னர், மூன்று மாத காலப்பகுதியினுள், சம்பந்தப்பட்ட தரப்பின ரது கருத்தை செவிமடுப்பதற்கு நியாயபூர்வமான வாய்ப்புகளை வழங்கியதன் பின்னர், அது தொடர்பிலான விடயத்தை சபை தீர்மானிக்கலாம்.

(3) ஒவ்வொரு மாகாணத்திற்குமான ஆலோசனைச் சபை தனது தீர்மானத்தை, மனக்குறைகளுக்கான பரிகாரத்திற்காக பொருத்தமான அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கலாம்.

(4) பொருத்தமான அதிகாரசபையின் தீர்மானத்தினால் பாதிக் கப்பட்ட யாராவது நபரொருவர், விரும்பினால் தனது மேன்முறை யீட்டை மாகாண மேல் நீதிமன்றத்தில் மேற்கொள்ளலாம்.

*தேசிய ஆலோசனைச் சபை உருவாக்கம்.*

**15**. ஒவ்வொரு மாகாணத்திற்குமென 15 உறுப்பினர்களைக் கொண்ட ஓர் ஆலோசனைச் சபை காணப்படல் வேண்டும். இவர்களுள் 7 உறுப்பினர்கள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையைச் சேர்ந்தவர்களாகவும், 7 உறுப்பினர்கள் மாகாண நிறைவேற்றுச் சபையினால் நியமிக்கப்பட்டவர்களாக வும் இருத்தல் வேண்டும். இதன் தவிசாளர் அமைச்சரினால் நியமிக்கப்படக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

*மாகாண ஆலோசனை சபையின் அலுவல்கள்.*

**16**. (1) ஆலோசனைச் சபையின் செயற்பாடுகள் பின்வரு மாறு :-

(அ) (i) இலவச பாடசாலைக் கல்வியை பூரணமாகவும் சமத்துவமாகவும் பெற்றுக்கொள்வதற்கான பிள்ளை யின் உரிமையை உறுதிப்படுத்தல் ;

(ii) பிள்ளையின் உடல், உளம், ஒழுக்கம், சமயம், சமூகம் சார்ந்த விருத்திகளை முழுமையாக உறுதிப்படுத்தக் கூடிய விதத்தில் அவர்களது நலன்களை மேம் படுத்துவதுடன் சுரண்டல், பாரபட்சம் காட்டல் ஆகியவற்றிலிருந்து அவர்களைப் பாதுகாத்தல் ;

(iii) பாடசாலைக் கல்வியை சகல பிள்ளைகளும், சகல மாணவர்களும் சமத்துவமாகவும் பூரணமாகவும் பெற்றுக் கொள்வதற்கான உரிமையை உறுதிப் படுத்தல் ;

(ஆ) 16 (1) (அ) பிரிவின் ஏற்பாடுகள் தொடர்பாக மாகாணத்தினுள் நடைமுறைப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக தேசிய சிறுவர் அதிகாரசபைக்கு அறிக்கை சமர்ப்பித்தல் ;

(இ) 14 ஆம் பிரிவின்கீழ் பரிகாரங்கள் தொடர்பாக விசாரித்து விதப்புரை செய்தல்.

(2) 6 ஆம் பிரிவின்கீழ் சபை இயங்குவதற்கான அதிகாரங்கள், நடைமுறைகள் உள்ளடங்கலாக, சகலவிதமான ஏற்பாடுகளையும் விதிக்கப்படக்கூடியவாறு அமைச்சர் இருத்தல் வேண்டும்.

(3) ஆலோசனைச் சபை உறுப்பினர்களுக்கான படிகள் மற்றும் அவர்களது நியமனம் தொடர்பான நியதிகள், நிபந்தனைகள் ஆகியன அவ்வித பொருத்தமான அதிகாரசபையினால் விதிக்கப்படக் கூடியதாகவும் இருக்கலாம்.

பொருள் கோடல்.

**17**. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய -

(அ) "பொருத்தமான அதிகாரசபை" எனப்படுவது :-

(i) அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படும் ஓர் அரச பாடசாலைகளைப் பொறுத்தவரை "அரசாங்கம்";

மற்றும்

(ii) (i) ஆம் உப உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைகளைத் தவிர்ந்த ஏனைய அரச பாடசாலைகளைப் பொறுத்தவரையில், "மாகாண நிறைவேற்றுச் சபை" யினால் கட்டுப்படுத்தப்படும் ஓர் அரச பாடசாலை.

(ஆ) "பிள்ளை" எனப்படுவது அனுமதி வருடத்தில் சனவரி 31 ஆம் திகதியன்று ஐந்து வயதையுடைய ஒரு பிள்ளை ;

(இ) பிள்ளை தொடர்பில் "பாதுகாவலர்" எனப்படுபவர் அப்பிள்ளையை பராமரித்து தனது பொறுப்பில் வைத்திருப்பவர். இதில் இயற்கையான பாதுகாவலர் அல்லது நீதிமன்றமொன்றினால் அல்லது நியதிச் சட்டமொன்றினால் நியமிக்கப்பட்ட அல்லது பிரகடனப் படுத்தப்பட்ட பாதுகாவலரும் உள்ளடங்குவர்;

(ஈ) “அமைச்சர்” எனப்படுபவர் பொருத்தமான அதிகார சபையின் கல்வி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர்;

(உ) “விதிக்கப்பட்டது” எனும் பொழுது இச்சட்டத்தினால் உருவாக்கப்பட்ட விதிகளினால் விதிக்கப்பட்டது ;

(ஊ) “விதிக்கப்பட்ட பாடசாலைகள்” எனும் பொழுது அரசியலமைப்பின் 9 ஆவது அட்டவணையின் I ஆம் பட்டியலின் 3 ஆவது விடயத்தின் பிரகாரம் அரசாங்கத்தின் கீழ் வருகின்ற அரச பாடசாலைகளாகும் ;

(எ) “மாகாண நிறைவேற்றுச்சபை” என்பது, அரசியலமைப்பின் 154 (ஊ) உறுப்புரையின்கீழ் செயற்படும் ஒவ்வொரு மாகாணத்திற்குமான மாகாணசபை அமைச்சர்கள் அல்லது சனாதிபதி அல்லது ஆளுநர் அல்லது அரசியலமைப்பின் 154 (ஊ) உறுப்புரையின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட யாராவது நபர் ;

(ஏ) “அட்டவணை” எனப்படுவது இச்சட்டத்தில் பின்னிணைப்பாக சேர்க்கப்பட்டுள்ள அட்டவணை ;

(ஐ) “பாடசாலைக் கல்வி” எனப்படுவது ஏதாவது பொதுப் பரீட்சைக்கு கட்டுப்பட்டவாறு முதலாம் வகுப்பு முதல் பதின்மூன்றாம் வகுப்பு வரையிலான கல்வி.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**18**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**அட்டவணை**

1. பிள்ளையின் கல்விக்கான உரிமையை பொருத்தமான அதிகாரசபை அங்கீகரிப்பதுடன் இவ்வுரிமையை முற்போக்கான முறையிலும், சமத்துவ வாய்ப்புக்களின் அடிப்படையிலும் அடையுமுகமாக குறிப்பாக பின்வருவன வற்றை மேற்கொள்ளலாம் :-

(அ) அனைவரும் ஆரம்பக் கல்வியை இலவசமாகப் பெற்றுக்கொள்வ தற்கான வழிமுறைகளை மேற்கொள்ளல் ;

(ஆ) பொது மற்றும் தொழில்கல்வி உள்ளடங்கலாக இடை நிலைக்கல்வியின் மாறுபட்ட வடிவங்களின் அபிவிருத்தியை உற்சாகப்படுத்தல், ஒவ்வொரு பிள்ளையும் அதனை அணுகி பெறக்கூடிய வாய்ப்புகளை ஏற்படுத்தல், இலவசக் கல்வியை அறிமுகம் செய்தல், அவசியமானவர்களுக்கு நிதி உதவிகளை வழங்கல் போன்ற பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள் ளல் ;

(இ) சகல பிள்ளைகளும் கல்வி, தொழிற்றுறை தகவல்கள், வழிகாட்டி கள் ஆகியவற்றை அணுகி பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்புகளை ஏற்படுத்தல் ;

(ஈ) பாடசாலைக்கு முறையாக வருகை தருவதை உற்சாகப்படுத்தக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் இடைவிலகல் வகிதத்தைக் குறைத்தல்.

2. பிள்ளையின் மனிதத்தன்மைக்குரிய தன்மானத்திற்கு ஏற்ற வகையிலும் தற்போதைய சமவாயத்திற்கு ஏற்புடைய வகையிலும் பாடசாலையில் ஒழுக்கம் பேணப்படுகிறது என்பதை உறுதி செய்து கொள்வதற்குரிய சகலவிதமான பொருத்தமான நடவடிக்கைகளையும் பொருத்தமான அதிகாரசபை மேற்கொள்ளக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

3. கல்வியுடன் தொடர்புடைய விடயங்களில் சர்வதேச ஒத்துழைப்பை, குறிப்பாக உலகளாவிய ரீதியில் காணப்படும் புறக்கணிப்புகள், எழுதப்படிக்கத் தெரியாமைகள் ஆகியவற்றை இல்லாதொழிப்பதற்கு பங்களிப்புச் செய்யும் நோக்குடனும், விஞ்ஞானம், தொழில்நுட்ப அறிவு, நவீன கற்பித்தல் முறைகள் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு வசதிப்படுத்தும் வகையிலும் அவற்றை உற்சாகப்படுத்தி மேம்படுத்தும் வகையிலும் பொருத்தமான அதிகாரசபை இருக்க வேண்டும். இதன் பொருட்டு அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் தேவைகள் குறிப்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

4. அடையக்கூடிய அதியுயர்வான சுகாதாரத்தை அனுபவித்தல், நோய்வாய்ப்படும் பொழுது சிகிச்சை பெறுவதை இலகுபடுத்தல், சுகாதார வசதிகளை மேம்படுத்தல் ஆகியன தொடர்பிலான பிள்ளையின் உரிமையை பொருத்தமான அதிகாரசபை அங்கீகரிக்கிறது. இவ்விதமான சுகாதார

பராமரிப்புச் சேவையைப் பெற்றுக்கொள்வதிலிருந்து எந்தவொரு பிள்ளையும் தடுக்கப்படவில்லை என்பதை உறுதிசெய்து கொள்வதற்கு அரச தரப்பினர் காத்திரமாக செயற்படக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.

5. சம்பந்தப்பட்ட சர்வதேச உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்டவாறு போதைப்பொருட்களையும், உளமருட்சி ஏற்படுத்தக் கூடிய பதார்த்தங்களையும் திருட்டுத்தனமாக பாவிப்பதிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாப்பதற்காக, சட்டம், நிர்வாகம், சமூகம், கல்வி உள்ளடங்கலாகவும் அவ்விதப் பதார்த்தங்களை திருட்டுத்தனமாக தயாரித்து அவற்றை கடத்துவதற்காகப் பிள்ளைகளைப் பயன்படுத்துவதை தடைசெய்யக்கூடிய விதத்திலும் பொருத்தமான சகல விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக் கூடியதாக பொருத்தமான அதிகாரசபை இருக்க வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்